2004 ஜூலை 30]

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 84, திரு. எ.வ. வேலு, மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

84—

ஒருங்கிணைந்த நீதிமன்றம்

***11755–திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் மாவட்ட அலுவலகக் கட்டடத்தின் பக்கத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

செயற்குறிப்புகள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திருமதி சி.எம். சூரியகலா.*

திருமதி சி.எம். சூரியகலா: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி பொற்பாதக் கமலங்களுக்கு எனது வணக்கத்தைக் கூறி, குடியாத்தம் நகரில் துணை நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம், நீதித் துறை நடுவர் மன்றம் ஆகியவை வெவ்வேறு இடங்களில் இயங்கி வருகின்றன. இதனால் வழக்குரைஞர்களுக்கு வாதிடுவதில் சிரமம் ஏற்படுகிறது. பொது மக்களுக்கும் அலைச்சல் ஏற்படுகிறது. ஆகையினால், குடியாத்தம் நகரில், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம் கட்ட, இடம் தேர்வு செய்யப்பட்டு, இதுவரை கட்டப்படவில்லை. இந்தக் கட்டடத்தைக் கட்டித் தர, அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

[2004 ஜூலை 30

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவசியத்தின் தன்மையை அரசு உணர்ந்திருக்கிறது. ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, அவர் குறிப்பிட்ட அந்த இடத்திலே கட்ட வேண்டுமென்றாலுங்கூட, நிதிச் சுமை இருக்கின்ற சூழ்நிலையில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்குப் பொதுவாக மத்திய அரசு 50 சதவிகிதம் நிதி உதவி அளிக்கிறது. எனவே, நம்முடைய மாமன்றத்தில் நான் தெரிவித்ததுபோல, 140 கோடி ரூபாய்க்கு மத்திய அரசாங்கத்திற்குக் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இடம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், 5 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் கட்டவும், ஆரணியில் 3 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டவுமான இவை உள்ளிட்ட மொத்தம் 74 செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. 140 கோடியில் அவர்கள் 70 கோடி கொடுத்தாலுங்கூட, நாம் 70 கோடி ரூபாயை நம்முடைய Matching Grant - ஆகப் போட்டு, இந்தத் திட்டத்தை ஒரு வருடத்திலேயே, அனைத்து ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களையும், நல்ல அழகிய கட்டடங்களாக உருவாக்குவதற்கு வழிவகை பிறக்கும்; மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேறும் என்று தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன். சட்டக் கல்லூரி வாங்காமல் விடமாட்டார்போல் இருக்கிறது.

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியில், வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்ட குதிரை லாயத்திலே நீதிமன்றம் செயல்படுகிறது. மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே, ஏற்கெனவே அதைப்பற்றிக் கடிதமாகக்கூட கொடுத்திருக்கிறேன். ஆரணி தொகுதியில், நீண்டகாலமாக இடிந்துபோகின்ற நிலையில் இருக்கிறது நீதிமன்றம். அதை ஒருங்கிணைந்த நீதிமன்றமாகக் கட்டித்தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே கவனித்திருப்பார் என்று நினைக்கிறேன்; என்னுடைய பதிலிலே நான்

2004 ஜூலை 30]

தெளிவாகக் குறிப்பிட்டேன். 3 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் மத்திய அரசாங்கத்திற்கு 74 செயற்குறிப்புகள் மாநில அரசுமூலம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த 74 செயற்குறிப்புகளில், ஆரணி பற்றியும் ஒரு செயற்குறிப்பு உள்ளது. எனவே, விரைந்து மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதம் எழுதி, ரூ.70 கோடி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெற்றவுடன், முதல் பணியாக நம்முடைய ஆரணி கோரிக்கை நிறைவேற்றப்படும்.

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவில் ஆரணிக்கு நீதிமன்றம் கட்டித் தரப்படும் என்று சொன்னதற்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 85, திருமதி கே. பவானி கருணாகரன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

85—

துணை மின் நிலையம்

***41283–திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதியில், தணிகை போளூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரக்கோணம் தொகுதி, தணிகை போளூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க, அவசியம் இருந்தால் நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.